## யூலை – 12 – வெள்ளி

**என் தலைவர் அவர்களைப் பார்த்து எள்ளி நகைக்கின்றார்: திபா. 37:13**

-----------------------------------------------------------------

### முதல் வாசகம்: தொடக்க நூல் 46 : 1 – 7,28 – 30

அக்காலத்தில், இஸ்ரயேல் தமக்கிருந்த யாவற்றையும் சேர்த்துக் கொண்டு புறப்பட்டு, பெயேர்செபாவைச் சென்றடைந்தார். அவ்விடத்தில் தம் தந்தை ஈசாக்கின் கடவுளுக்கு பலிகளை ஒப்புக்கொடுத்தார். அன்றிரவு கடவுள் இஸ்ரயேலுக்குக் காட்சி அளித்து, "யாக்கோபு! யாக்கோபு!" என்று அழைத்தார். அவர், "இதோ அடியேன்" என்றார். கடவுள், "உன் தந்தையின் கடவுளான இறைவன் நானே, எகிப்திற்குச் செல்ல நீ அஞ்ச வேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக வளரச்செய்வேன். நானும் உன்னோடு எகிப்திற்கு வருவேன். உன்னை நான் அங்கிருந்து மீண்டும் அழைத்து வருவேன். யோசேப்பு தன்கையாலே உன்கண்களை மூடுவான்" என்றார். யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப் புறப்பட்டார். இஸ்ரயேலின் புதல்வர்கள் தம்தந்தையாகிய யாக்கோபையும் தங்கள் பிள்ளைகளையும் மனைவியரையும் அவருக்குப் பார்வோன் அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக்கொண்டனர். கானான் நாட்டில் அவர்கள் சேர்த்திருந்த ஆடு மாடுகளையும் சொத்துகளையும் சேகரித்துக் கொண்டனர். இவ்வாறு யாக்கோபு தம் வழிமரபினர் அனைவரோடும் எகிப்திற்குப் போனார். தம் புதல்வரையும் அவர்கள் புதல்வரையும் தம் புதல்வியரையும் புதல்வரின் புதல்வியரையும் தம் வழிமரபினர் அனைவரையும் அவர் தம்மோடு எகிப்திற்கு அழைத்துக் கொண்டு சென்றார். கோசேன் பகுதியில் யோசேப்பு தம்மை வந்து சந்திக்குமாறு யாக்கோபு யூதாவைத் தமக்குமுன் அனுப்பியிருந்தார். அவர்கள் கோசேன் வந்து சேர்ந்தார்கள். யோசேப்பு தம் தேரைப் பூட்டிக்கொண்டு தம் தந்தை இஸ்ரயேலைச் சந்திக்கச்சென்றார். யோசேப்பு தம் தந்தையைக் கண்டவுடன் அவரை அரவணைத்து அவர் தோளில் சாய்ந்துகொண்டு வெகுநேரம் அழுதார். அப்பொழுது, இஸ்ரயேல் யோசேப்பிடம், "இப்பொழுது நான் சாகத்தயார். நீ உயிரோடு தான் இருக்கிறாய்! உன் முகத்தைக் கண்ணாரக் கண்டுவிட்டேன்!" என்றார்.

**பதில்பாடல் :** நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகிறது.

### நற்செய்தி : மத்தேயு 10 : 24 - 33

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது : "இதோ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப்போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச்சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச்செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, "என்னபேசுவது, எப்படிப்பேசுவது" என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேசவேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார். சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும் தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர். அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால் வேறொரு நகருக்கு ஓடிப்போங்கள். மானிட மகனின் வருகைக்குமுன் நீங்கள் இஸ்ரயேலின் எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்க மாட்டீர்கள் என உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** இன்றைய உலகில் மேடுபள்ளம், கஷ்ட துன்பம் நிறைந்த வாழ்க்கைச் சக்கரத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எவ்வாறாக இருப்பினும் நாங்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டவர்களாக உறுதியுடன் வாழும் பொழுது யாவற்றிலும் வெற்றி பெறறவர்களாவோம். காரணம் அவை எம்மால் முடியாது எம்மை வழிநடத்தும் தூய ஆவியானவரால் மட்டுமே முடியும். நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படி நடக்கவேண்டும்? என்ன சொல்ல வேண்டும் என்று கற்றுத் தருபவா் தூய ஆவியே. எனவே தான் அன்று சீடர்களிடம் பேசுவது நீங்கள் அல்ல மாறாக உங்களிடமிருந்து பேசுவது தூய ஆவியே (மத்.10:22) என்று கூறி முன்மதியுடன் நடந்து கொள்ளுமாறு அனுப்பிவைக்கின்றாா். ஏனெனில் அவா் அடையவிருக்கும் துன்பங்கள், ஏமாற்றங்கள், பழிப்புரைகள் அறிந்தவராக அறிவுபுகட்டுகிறாா். எனவேதான் "ஓநாய்களிடையே அனுப்பப்பட்ட ஆட்டுக்குட்டிகள் போன்று உங்களை நான் அனுப்புகிறேன்" (மத்.10:16) என்று கூறி அனுப்பினாா். அவா்களைதன் பொருட்டு பிற இனத்தவா்கள் மத்தியிலும், யூதா்கள் மத்தியிலும் நிறுத்துவா் எனவே உறுதியுடன் செயல்படுங்கள் என்கின்றாா். இன்று எங்கள் மத்தியிலும் கோயில் கோயில் என்று திரிகிறானே இதனால் என்ன பயன? அப்படித் திரிந்தால் கடவுளாமேலே இருந்து யாவற்றையும் தரப்போகிறாா் என்றெல்லாம் வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறான தேவையற்ற பேச்சுக்களால் மனம் கலக்கமடையத்தான் செய்கின்றது. ஆனால் நாங்கள் இயேசுவின் பொருட்டு எவற்றையெல்லாம் செய்கின்றோமோ அவையாவற்றிலும் வெற்றியே. எமக்கு ஏற்படும் துன்பங்கள், கஷ்டங்கள் யாவும் உணா்ந்து செயல்படவே. எனவே யாவும் நன்மைக்கே என்று ஏற்றுக் கொண்டு ஆவியாரின் கனிகளாலும், கொடைகளாலும் நிரப்பட்டவா்களாக உண்மை வழி நடக்க தூய ஆவியானவரிடம் வரம் வேண்டுவோம்.